www.Padasalai.Net

திருவண்ணாமலை மாவட்டக் கல்வி அலுவலரின் (தொடக்கக் கல்வி) செயல்முறைகள்

ந.க.எண். 1471/ஆ3/2024, நாள். 29.04.2024.

பொருள் : தொடக்கக் கல்வி - திருவண்ணாமலை கல்வி மாவட்டம் - இடைநிலை ஆசிரியர் பணியிடத்திலிருந்து தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் பணியிடத்திற்கான மாநில அளவிலான முன்னுரிமைப்பட்டியல் தயாரித்தல் - தகவல்கள் அனுப்பக் கோருதல் – சார்பாக.

பார்வை : தொடக்கக் கல்வி இயக்குநரின் மின்னஞ்சல் செய்தி நாள்.27.04.2024

---

இடைநிலை ஆசிரியர் பணியிடத்திலிருந்து தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் பணியிடத்திற்கான மாநில அளவிலான முன்னுரிமைப்பட்டியல் தயாரிப்பது சார்ந்து முதல்கட்டமாக 2011-2012 -ம் கல்வியாண்டில் TRB மூலம் தேர்வு செய்யப்பட்ட முதல் தகுதி தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் சார்பான விவரங்களை மட்டும் கீழ்கண்ட படிவத்தில் பணிப்பதிவேட்டின் அடிப்படையில் தகவல்கள் தயார் செய்து 30.04.2024 பிற்பகல் 4.00 மணிக்குள் இவ்வலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி, அதன் கையொப்பமிட்ட நகலை தனிநபர் மூலம் ஒப்படைக்குமாறு அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி படிவத்தில் Arial Font Only - 12 Size ஆங்கில வடிவுருவில் மட்டும் தட்டச்சு செய்யுமாறும் எந்த கலத்தினையும் மாற்றம் செய்யக்கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: படிவம்.

மாவட்டக் கல்வி அலுவலர்
(தொடக்கக்கல்வி)
திருவண்ணாமலை.

பெறுநர் : அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்.
திருவண்ணாமலை கல்வி மாவட்டம்.